**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: செங்கேனி பழனி**

**தேதி: 27.08.2025** **நேரம்: மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஃபிடே உலகக் கோப்பை செஸ் போட்டிகளை இந்தியா நடத்துவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய குடிமக்களின் உயிருடன் விளையாடிய பயங்கரவாதிகளுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் தகுந்த பாடம் புகட்டப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சுங்கச்சாவடி ஊழியர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவுவதற்காக ஆரோஹன் என்ற திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தொடங்கி உள்ளது.

*விநாயகர் சதுர்த்தி 1* (5)

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழா இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது. விநாயகர் சதுர்த்தி விழா இந்துக்களின் முக்கியமான விழாவாக கருதப்படுகிறது. விநாயக பெருமானின் பிறந்த நாளை கொண்டாடும் வகையில் இந்த விழா ஒரு பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

**வாய்ஸ்**

*விநாயகர் சதுர்த்தி 2* (15)

**வாய்ஸ்**

விநாயகர் சதுர்த்தி விழா பொதுவாக ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி திதியில் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் விநாயகர் சிலைகளை வீட்டில் வைத்து வழிபட்டு பின்னர் அவற்றை நீர் நிலைகளில் கரைப்பது வழக்கமாக உள்ளது. இது பூமிக்கும் நீர் நிலைகளுக்கும் உரிய பக்தி மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை குறிக்கிறது. விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு மக்கள் இனிப்பு மற்றும் சுண்டல் ஆகியவற்றை நெய்வேதியம் செய்து பக்தர்களுக்கு வழங்குவது வழக்கமான ஒன்றாகும்.

புதுச்சேரியில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, புகழ்பெற்ற மணக்குள விநாயகர் ஆலயத்தில் இன்று அதிகாலை சிறப்பு அபிஷேகத்துடன தரிசனம் தொடங்கியது. விநாயகர் சிலை தங்க கவசத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. புதுச்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தரக்ள் நீண்ட வரிசையில் நின்று விநாயகரை தரிசித்தனர். இதேபோல், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து விநாயகர் ஆலயங்களிலும் சிறப்பு கொண்டாடங்களும், பூஜைகளும் நடைபெற்று வருகின்றன.

*வாழ்த்து* 1 (17)

விநாயகர் சதுர்த்தி இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுவதை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்த விழா நேர்மறையான மனப்பான்மையுடன், எண்ணற்ற மக்களை ஊக்குவிப்பதாக தெரிவித்துள்ளார். நாட்டின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், தூய்மையான பசுமையான மற்றும் வளமான தேசத்தை உருவாக்குவதை பங்களிக்கும் வகையிலும் பொதுமக்கள் விழாவை கொண்டாடுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாக குடியரசு தலைவர் மாளிகை வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில், நம்பிக்கையும், பக்தியும் இணைந்த மங்களகரமான விநாயகர்

சதுர்த்தி அனைவரது வாழ்விலும் இனிதாக அமையட்டும் என குறிப்பிட்டுள்ளார். மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி,

வாழ்த்து 2 (6)

அமைதி மற்றும் நல் உடல் ஆரோக்கியத்தை விநாயகர் அருள தாம் பிராத்தனை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில், ஸ்ரீ கணேஷ் சதுர்த்தி புனித பண்டிகை நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும், அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி மற்றும் செழிப்பு ஏற்பட விநாயகரை தாம் பிராத்தனை செய்வதாகவும் கூறியுள்ளார்.

மோடி ஃபிடே(12)

ஃபிடே உலகக் கோப்பை செஸ் போட்டிகளை இந்தியா நடத்துவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், 20 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த போட்டி நடைபெறுவதால் நம் நாட்டு இளைஞர்கள் இடையே செஸ் விளையாட்டு பிரபலம் அடைய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த தொடர் பல்வேறு விதமான போட்டிகளை எதிர் கொள்வதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், உலகின் தலைசிறந்த முன்னணி வீரர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதாக அமையும் என்றும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார். வரும் அக்டோபர் 30 ஆம் தேதி முதல், நவம்பர் 27 ஆம் தேதி வரை உலகக் கோப்பை செஸ் போட்டிகள் கோவாவில் நடைபெற உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

*மோடி பயணம்* 1 (15)

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசு முறை பயணமாக நாளை ஜப்பான் மற்றும் சீன நாட்டிற்கு செல்ல உள்ளார். ஜப்பானில் இம்மாதம் 29 மற்றும் 30 ஆம் தேதிகளில் நடைபெறும் 15 ஆவது இந்திய-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார். இது குறித்து புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத் துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி, வரும் 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் ஜப்பானில் நடைபெறும் உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்க உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்த உச்சி மாநாடு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் என்றும், முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜப்பானிய பிரதமருடன் இருதரப்ப உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தும் பிரதமர், பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சீனாவில் வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 25 ஆவது உச்சி மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

*அமித் ஷா* (14)

இந்திய குடிமக்களின் உயிருடன் விளையாடிய பயங்கரவாதிகளுக்கு ஆபரேஷன் சிந்தூர் மூலம் தகுந்த பாடம் புகட்டப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை வெற்றிகரமாக வீழ்த்திய இந்திய ராணுவம், ஜம்மு-காஷ்மீர் காவல் துறை மற்றும் சிஆர்பிஎப் வீரர்களை அவர் இன்று சந்தித்து கவுரவித்தார். நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மக்களுக்கு திருப்தி அளித்தது என்றும், ஆபரேஷன் மகாதேவ் அந்த திருப்தியை நம்பிக்கையாக மாற்றியது என்றும் கூறினார். பயங்கரவாதிகள் தங்கள் முறைகள் மற்றும் யுக்திகளை எவ்வாறு மாற்றினாலும், அவர்கள் இனி இந்தியாவிற்கு தீங்கு விளைவித்து தப்பிக்க முடியாது என்பதை நாட்டின் வீரர்கள் உலகிற்கு காட்டி உள்ளனர் என்றும் அவர் கூறினார். நிகழ்ச்சியில், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் நாட்டின் சார்பாக மக்களின் இதயங்களில் பாதுகாப்பு உணர்வை வலுப்படுத்திய அனைத்து பாதுகாப்பு படையினரையும் அவர் பாராட்டினார்.

*ஆரோஹன்* (14)

சுங்கச்சாவடி ஊழியர்களின் கல்வித் தேவைகளுக்கு உதவுவதற்காக ஆரோஹன் என்ற திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் தொடங்கி உள்ளது. பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு தரமான கல்வி சம அளவில் வழங்கவும், அவர்களுக்கான நிதி தடையை போக்கும் வகையிலும் இந்த திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுங்கச்சாவடி ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் கல்வியை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. 11 ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் 500 மாணவர்களுக்கு உதவும் வகையில் இத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அந்த மாணவர்களுக்கு 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், கூடுதலாக முதுகலை பட்டப்படிப்பு மற்றும் உயர் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ராஜ்நாத் சிங்* (17)

எதிர்காலத்தில் போர்கள் வெறும் ஆயுதப் போர்களாக மட்டும் அல்லாமல் தொழில்நுட்பம், உளவு, பொருளாதாரம், ராஜதந்திரம் ஆகியவற்றின் கலவையாக இருக்கும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேச மாநிலம் டாக்டர் அம்பேத்கர் நகரில் ராணுவ போர் கல்லூரியில் நடைபெற்ற ரன் சம்வாத் 2025 என்ற கூட்டு உரையாடல் நிகழ்ச்சியின் நிறைவு நாளில் உரையாற்றிய அவர், தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார். ஆளில்லாத விமானங்கள், அதி வேகமாக சென்ற தாக்கக் கூடிய ஏவுகணைகள், சைபர் தாக்குதல்கள், செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் முடிவெடுக்கக் கூடிய உபகரணங்கள் ஆகியவை நவீன போர் முறைகளில் எதிர்பாராத மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். தற்போதைய உலகின் தொழில்நுட்ப முன்னேற்றம் என்பது சக்தி வாய்ந்ததாக உருவெடுத்து உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் ஒரு முன்னேற்றமாக உருவெடுத்து உள்ளதாகவும் அவர் கூறினார். எதிர்காலத்தில் தொழில்நுட்பம்

திட்டமிடல், யுக்தி, சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளுதல் போன்றவை உலகளாவிய சக்தியாக உருவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*உணவு பாதுகாப்பு* (17)

ஒட்டு மொத்த உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், கோதுமை இருப்பிற்கு மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பதுக்கலை தடுக்கவும், தேவையற்ற யூகங்களை கட்டுப்படுத்தும் வகையிலும் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த கையிருப்பு கட்டுப்பாடு பொருந்தும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி, வர்த்தகர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் 2 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு மட்டுமே கோதுமையை கையிருப்பில் வைத்திருக்க முடியும் என நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் பொது விநியோக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதே போல் சில்லறை விற்பனையாளர்கள் 8 மெட்ரிக் டன் கோதுமையை கையிருப்பில் வைத்திருக்கலாம் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. அனைத்து தரப்பினரும் கோதுமை கையிருப்பு தொடர்பான அறிக்கையை வெள்ளிக்கிழமை தோறும் தெரிவிக்க வேண்டும் என்றும் அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது. இந்த கட்டுப்பாடு அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை இருக்கும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

*வானிலை* (7)

ஒடிசா கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள வங்கக் கடல் பகுதியில் ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் வலுவடைய கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.